DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 552/2024
(Splitup From Mother case in C.C. 83/2022)

Prosecution PW 8

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | செல்வக் குமார் |
| Father's Name | : | சேட்டு |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.03.2026.

**2ம் எதிரி ஆஜர். (1ம் எதிரிக்கு தாய் வழக்கான சிசி எண்.86/2022 வழக்கில் பிடியாணை நிலுவையிலுள்ளது. )**

**முதல் விசாரணை**

நான் தாந்தோணிமலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.01.2021 ஆம் தேதி 21.00 மணியளவில் தாந்தோணிமலை காவல் நிலைய காவல் ஆய்வாளர்களாக நிலைய பொறுப்பிலிருந்த நெப்போலியன், சிவசங்கரி,

செந்தில் குமார் ஆகியோர்களின் கையெழுத்து எழுத்து நடை நன்கு பரிட்சயம் என்பதால் அவர்களுக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 27.01.2021 ம் தேதி 21.00 மணியளவில் உதவி ஆய்வாளர் மணிவாசகம் நிலைய பொறுப்பில் இருந்த போது விஜயசாரதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று தாந்தோணிமலை காவல் நிலைய குற்ற எண்.97/2021, ச/பி.392 இதச படி வழக்கு பதிவு செய்துள்ளா். பின்பு வழக்கினை அப்போதைய காவல் ஆய்வாளர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செந்தில் குமார், சதிஷ் குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** பின்பு சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரியவந்ததன்பேரில் எதிரிகளை தேடி வந்ததில் காவல் ஆய்வாளர் நெப்போலியன் வெங்கமேடு காவல் நிலைய குற்ற வழக்கில் நீதிமன்ற காவலிலிருந்த பாஸ்கர் (எ) பேய் பாஸ்கர், சபரிகரன் ஆகியோர்கள் குற்ற வழக்கில் ஈடுபட்டிருந்ததால் சம்பிரதாய கைது செய்து பின்னர், அவரை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து போலிஸ் காவலில் எடுத்து சாட்சிகள் வெங்கடேஷ், கோபிநாத் முன்னிலையில் விசாரித்தபோது தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி எடுத்து ஆஜர் செய்த நான்கு பவுன் செயினை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளர். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான எங்களை அழைத்துச் சென்றால் எனது வீட்டின் முன்புறமுள்ள ஓட்டு தாள்வாரத்தில் மஞ்சள் பையில் மறைத்து வைத்திருக்கும் நகைகளை எடுத்து ஆஜர் செய்கிறேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், காவல் ஆய்வாளர் சிவசங்கரி, சாட்சிகள் வெங்கடேஷ், கோபிநாத், உதவி ஆய்வாளர் மணிவாசகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர், காவல் ஆய்வாளர் செந்தில் குமார் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம்**

**91 அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் காவல் ஆய்வாளர் செந்தில் குமார் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரைப் பெற்று எதிரிகள் மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகசர், வரைபடம், கைப்பற்றுதல் மகசர் போன்ற ஆவணங்களை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றாலும், எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடம் இருந்து வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**